23—

கால்நடை கிளை நிலையம்

**33962—திரு. டி. இராமச்சந்திரன்:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தொட்டமஞ்சி மலைக் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தக் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற தளி தொகுதி, தொட்டமஞ்சி மலைக் கிராமத்திலே 3,000 கால்நடை அலகுகளுக்குமேல் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டமஞ்சி ஊராட்சியில் தொட்டமஞ்சி, சிக்கமஞ்சி, வடகரை, கெம்பகரை, பிலிகுண்டு, கொச்சாவூர் உள்ளிட்ட 30—க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களிலே வாழ்கின்ற மக்களின் ஜீவாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு இருந்துவருகிறது. அந்தப் பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்நடை மருந்தகமோ, கால்நடை கிளை மருந்தகமோ இல்லை. அந்த ஊராட்சியில் சுமார் 4,200 கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளுக்கு ஏற்படும்*

2014 பிப்ரவரி 1]

நோய்களுக்கு மருத்துவம் பார்க்க அஞ்செட்டியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு டெம்போ, லாரி போன்ற வாகனங்களின்மூலம்தான் கால்நடைகளை ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கே கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத் தரப்படுமென்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடுமையான வறட்சி இருப்பதால், கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக நுண்ணீர் பாசன வசதியோடு, மானிய விலையில் புல் வளர்த்து கால்நடைகளுக்கு வழங்கப்படுமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 24.50 கோடி ரூபாய் செலவிலே, 30 மாவட்டங்களிலும் பசுந்தீவனம் வளர்க்கப்பட்டு, அந்தந்த மாவட்ட தீவனக் கிடங்குகள்மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலும் நிச்சயமாக அதை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

காகித அட்டை தொழிற்சாலை

***41183—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் பகுதியில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?